**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

OS No. 19/2018

20.03.2025

**<u>வா.சா.1 நாராயணன் த/பெ. ராகவாச்சாரியார் மனு அனுமதிக்கப்பட்டதின் பேரில் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-**

இந்த வழக்கில் நான் சென்னை KK நகர் முவகரியை கொடுத்துள்ளேன் என்றாலும்அது தான் என்னுடைய நிரந்தர முகவரி என்றால் சரிதான். எப்போதாவது மன்னார்குடிக்கு வந்து செல்வேன் என்றால் 45 நாட்களுக்கு 1 முறை இங்கு வந்து 3 நாட்கள் தங்கி செல்வேன். என்னுடன் பிறந்தவர் 4 பெண்கள் 3 ஆண்கள். அண்ணன் பெயர் வரதராஜன் , 2 வது அண்ணன் பெயர் ஸ்ரீதரன். வரதராஜனுக்கு வாரிசுகள் உள்ளார்கள். வாதிகளாகவும் உள்ளார்கள். பிரதிவாதி பெயர் விஜயா ஆகும். விஜயாவை எனக்கு எவ்வளவு ஆண்டுகளா தெரியும் என்றால் 15 ஆண்டுகளாக தெரியும். விஜயா என்னிடம் சொத்து வாங்கவில்லை. விஜயா யாரிடமிருந்து சொத்து வாங்கினார் என்றால் கணேசன் மற்றும் பாலம்மாள் ஆகியோர்களிடமிருந்து கிரயம் பெற்றார். எப்போது கிரயம் பெற்றார் என்று தெரியாது. எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பழைய சர்வே எண் 2201 புதிய சர்வே எண் 2 அதை குறிப்பிட்டு என்னுடைய பிராதில் கூறியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தகப்பனார் 2 கிரய பத்திரம் மூலம் வழக்கு சொத்தை கிரயம் பெற்றார். அவற்றின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அசல் ஆவணம் என் கையில் உள்ளது . பாமினி ஆற்றங்கரைக்கு தெற்கில் உள்ளது வழக்கு சொத்து. அந்த நிலங்கள் அனைத்து 1969 வரை விளைநிலங்களாக இருந்தது. என்னுடைய நிலத்திற்கும் கணேசன் வாங்கிய நிலத்திற்கும் இடையில் 10 அடியில் வாய்கால் சென்றது என்றால் இல்லை. தண்ணி வாய்க்கால் என்று தற்போது சொல்வது தவறு என்று சாட்சி கூறுகிறார். அந்த வாய்க்காலானது தபிர்குளத்தில் சென்று விழுந்தது என்றால் இல்லை. வழக்கு சொத்தின் நான்கு எல்லையில் வடக்கு வாய்க்கால் இருந்து என்பதை ஒப்புக்கொள்கிறேன் என்றால் 1969 வரை வாய்காலாக பயன்படுத்திவந்தார்கள். அதை எங்கள் பட்டா நிலத்திற்கு மட்டுமே பயன்படுத்தி வந்தோம். அந்த வாய்காலுக்கு தென்புறம் கணேசதேவர் நிலம் என்றால் சரிதான். தற்போது அந்த இடத்தைகொடுத்துவிட்டு மனைப்பிரிவாக போட்டுள்ளேன். 1995 லே மனைபிரிவு பெற்றுள்ளேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.03.26 16:33:52 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி